# அமைச்சர் எ.வ.வேலு ‘கலைஞர் செய்திகள்’ தொலைக்காட்சிக்கு அளித்த நேர்காணல்...

9ஆம் பக்கத் தொடர்ச்சி

என்று இருந்தது. ஏன் என்றால், இப்போது இருக்கும் முதலமைச்சர் எதிர்பார்ப்பார். நான் இரண்டு பேரிடமும் பணியாற்றி இருக்கிறேன்.

**இந்த சிறப்புக்கெல்லாம் சொந்தக்காரர் முதல்வர்தான்!**

இரண்டு பேரிடம் பணியாற்றி இருக்கிறேன் என்பதைவிட, ஒரு தொண்டுணர்வோடு பணியாற்றி இருக்கிறேன். தொடர் நடவடிக்கை என்று சொல்வார்கள் பாருங்கள். அது கலைஞரைவிட, இவரிடம் வேலை பார்ப்பது மிகவும் கடினம். அந்த தொடர் நடவடிக்கையில் அவர் உறுதியாக இருப்பார். ஒரு பணியை சொல்லிவிட்டார் என்றால், அந்த பணி முடியும் வரை ஃபாலோ செய்து கொண்டே இருப்பார். அதை ஒரு இலக்காக வைத்திருக்கிறார் என்று கூட சொல்லலாம். அதனால், அந்த உணர்வு எனக்கு இருப்பதனால் அது சிறப்பாக அமைந்தது என்று சொல்லலாம். இந்த சிறப்புக்கெல்லாம் அவர்தான் அதிகமான சொந்தக்காரர்.

அவர் இன்று சென்னையில் இருக்கலாமேயொழிய, அங்கு எல்லாமே அவர்தான். சாதாரணமாக நடந்து செல்லும் டைல்சிலிருந்து அனைத்தும் அவருடைய செலக்சனாகத்தான் இருக்கும். நான் எப்போதுமே அப்படி வைத்துக் கொள்வேன். எப்போதுமே ஒரு ஒப்புதல் வாங்கிக் கொள்வேன். சாதாரண விஷயமாக நான் விடமாட்டேன். சின்ன சின்ன விஷயமாக இருந்தாலும் அவரிடம் ஒப்புதல் பெறுவேன். அவருடைய ஒப்புதல் இல்லாமல் எதுவும் செய்ய மாட்டேன். அது தேவை இல்லை என்று நினைப்பேன்.

கிராமத்தில் சாதாரணமாகச் சொல்வார்கள். மரம் நன்றாக இருந்தால், அந்த நிழலில் நாம் நின்று கொள்ளலாம் என்று சொல்வார்கள். அது போன்று, அவர் புகழுடன் நன்றாக இருக்கிறார் என்றால், அந்த நிழலில் நாம் நின்று கொள்ளலாம். அப்படித்தான் என்னுடைய சிந்தனைகள் எப்போதும் இருக்கும். அந்த சிந்தனைதான் எனது வெற்றியாக அமைகிறது என்றுகூட சொல்லலாம்.

**முதலமைச்சரின் யோசனையோடு செய்யப்பட்டதுதான்!**

**நெறியாளர்:** மிகவும் அழகாக சொன்னீர்கள். பொறுப்புணர்வோடு இருந்ததுதான் அது அமைக்கப்பட்டது. சின்ன வயதிலிருந்தே பெரியாரின் பேச்சைக் கேட்டு இருக்கிறேன். அதன் பிறகு, கலைஞரோடு இருந்தேன். கலைஞர் பேசிக்கொண்டே இருந்தார். இதனுடைய அனைத்து தாக்கமும்தான் பெரியாரை அங்கு அவ்வாறு நிலைநிறுத்தியது என்று. அந்த நினைவகத்தை நாங்கள் தொடர்ந்து பார்க்கும்போது நிறைய இடங்களில் கல்வெட்டுகள் பதித்து வைத்திருந்தீர்கள். அவருடைய பொன்மொழிகள் அதிகம் இருந்தது. ஒரு திறந்தவெளி அரங்கம் இருந்தது. அதையெல்லாம் ஏன் செய்திருக்கிறீர்கள்?

**அமைச்சர் எ.வ.வேலு :** முதலமைச்சர் பழமையும் விரும்புவார், சமகாலத்து விரும்பியாகவும் இருப்பார். இந்த இளைஞர்களின் எண்ணங்கள் என்ன என்பதையும் பார்ப்பார். வருங்காலம் என்ன என்பதையும் சிந்திக்க வேண்டும் என்று நினைப்பார். அவரை நீங்கள் எங்கு வேண்டுமானாலும் பொருத்திப் பார்க்கலாம்.

அவருடன் ஒரு கலந்துரையாடல் வரும்போது என்ன சொன்னார் என்றால், 70 சென்ட் வைத்திருக்கிறீர்கள். இரண்டு பக்கமும் வைத்திருக்கிறீர்கள். இடைப்பட்ட இடம் எல்லாம் இருக்கிறது. அது நகரின் மையப் பகுதியாக இருக்கிறது. அதனால் சிறுவர்கள் எல்லாம் வர வேண்டும் என்றால், சிறுவர்கள் விளையாட்டுப் பூங்கா ஒன்று அமைக்கலாம் என்று சொன்னார். இரண்டாவது, ஒரு திறந்தவெளி அரங்கம் அமையுங்கள். அங்கு நகராட்சியாக இருப்பதனால், மாலை நேரங்களில் அங்கிருப்பவர்கள் ஒரு நிகழ்ச்சி நடத்துவதற்குகூட ஏதுவாக இருக்கும் என்று ஒரு திறந்த வெளி அரங்கம் அமையுங்கள் என்று சொன்னார். அதனால்தான், ஒரு பக்கம் விளையாட்டுப் பூங்கா இருக்கும். இன்னொரு பகுதியில், இன்றைக்கு இருக்கும் நீர் டெக்னாலஜியை பயன்படுத்தி ரவுண்டு ஷேப்பில் சென்டரில் ஒரு குடைபோன்று போடப்பட்டிருக்கும். அந்த குடை போன்ற பகுதியில் ஒரு நிகழ்ச்சி நடத்துகிறார்கள் என்று சொன்னால், சுற்றிலும் உட்கார்ந்து பார்ப்பதற்காகத் தான் அந்த அரங்கம் அமைத்திருக்கிறோம். இதுவும் முதலமைச்சரின் யோசனைதான்.

**கேரள முதல்வரின் எளிமை!**

**நெறியாளர்:** நிறையப் பணிகள் நிமித்தமாக நீங்கள் கேரள முதலமைச்சரை அடிக்கடி சந்திக்கிறீர்கள். வயநாடு துயரம் என்றாலும் அங்கு தான் செல்கிறீர்கள். வைக்கத்திற்காகவும் நீங்கள் அங்கு சென்றீர்கள். அவருடைய மன உணர்வுகள் தலைவர் மீது எப்படி இருக்கிறது? அவருடைய தனிப்பட்ட உணர்வுகள் எல்லாம் எப்படி இருக்கிறது?

**அமைச்சர் எ.வ.வேலு :** கேரளா முதலமைச்சர் பொதுவுடமை சித்தாந்த அடிப்படையில் அரசியல் வாழ்க்கையை பயணித்துக் கொண்டிருப்பவர். எளிமையை சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. பொதுவுடமை சித்தாந்தம் உள்ளவர்கள் எப்போதுமே எளிமையாக இருப்பார்கள். அந்த எளிமையை நான் அவரிடம் எப்போதும் பார்ப்பேன். எப்போதும் எளிமையாகதான் பேசுவார். அவரை நான் இதுவரை மூன்று முறை சந்தித்திருக்கிறேன். அவ்வாறு செல்லும்போதெல்லாம், முதலில் முதலமைச்சர் எவ்வாறு இருக்கிறார் என்றுதான் கேட்பார். உடன் பிறந்த சகோதரர் என்ற வாஞ்சையோடு எப்போதும் பேசுவார். அதன் பிறகு, தமிழ்நாடு அரசாங்கத்தில் ஏதாவது புதிய திட்டங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்றால், அது பற்றி சொல்வார். எப்படி இந்தத் திட்டம் வெற்றியடைகிறது என்று கேட்பார். அவ்வாறுதான், நான் ஒவ்வொரு முறையும் அவரை சந்திக்கும்போது பார்க்கிறேன்.

அழைப்பிதழ் வழங்கும்போது கூட அந்த அழைப்பிதழை திருப்பித் திருப்பி பார்த்தார். 'ஓ' அப்படி என்றார். அந்த அழைப்பிதழை தேர்வு செய்ததுகூட நம்முடைய முதலமைச்சர் தான்.

**நெறியாளர்:** இவ்வளவு பணிகள் இருக்கும்போதும், அதில் அவர் தனிக் கவனம் செலுத்தி தேர்வு செய்கிறார் அல்லவா?

**அமைச்சர் எ.வ.வேலு :** அவர் யாருங்க... அவர் கலைஞர் வீட்டு பிள்ளைஙக... கலை என்றால் என்ன? உணர்வால் இருப்பதுதான் கலை. கலை என்பதே உணர்வால் வருவதுதானே. அவர் உணர்வால் இருப்பார்.

**நெறியாளர்:** நிறைவாக ஒரு கேள்வி. இந்த நினைவகத்தின் செய்திகளிலேயே நாங்கள் இருக்கிறோம். அடுத்த நாள் ஒரு செய்தி, கன்னியாகுமரியில் இருக்கிறீர்கள். கண்ணாடி பாலத்தை பார்வையிட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்று. எப்போது நாங்கள் முழுமையான கண்ணாடிப் பாலத்தை பார்க்கலாம். எப்படி இருக்கிறது ?

**அமைச்சர் எ.வ.வேலு :** இப்போது முதலமைச்சரின் திட்டமிடல் என்ன என்றால், அய்யன் வள்ளுவர் பொதுமறையை நமக்கு தந்தவர். மதத்திற்கெல்லாம் அப்பாற்பட்டவர். அண்ணன் கலைஞருக்கு அவர் மீது மிகுந்த ஈடுபாடு. ஒருமுறை திருவண்ணாமலைக்கு வந்திருந்தார் கலைஞர். நிகழ்ச்சி முடிக்கப் போவதற்கு முன்னால் நான் கேட்கிறேன். என் கேம்பசில் பள்ளி ஒன்று கட்டியிருக்கிறேன். செல்லும்போது காரில் இருந்தே ஒரு ரிமோட்டில் ஒரு பட்டனை அழுத்தினீர்கள் என்றால், அந்த கல்லில் உங்கள் பெயரைப் போட்டு திறந்து கொள்வேன் என்று சொன்னேன். உடனே அவசரமாக என்ன செய்தேன் என்றால், மறுநாள் காலையில் ஒரு அரை பக்க விளம்பரம். நான் ஒரு வரி சேர்த்தேன். 21 ஆம் நூற்றாண்டில் எங்கள் அய்யன் கலைஞர் அவர்கள் திறந்து வைப்பார் என்று விளம்பரம் போட்டேன்.

இந்த விளம்பரத்தைப் பார்த்தார். “என்ன இது?” என்று கேட்டார். இல்லை அண்ணா... அழைப்பிதழ் அடிக்க முடியவில்லை. நீங்கள் இரவில்தான் ஒப்புதல் கொடுத்தீர்கள். அதனால் வேறு வழி தெரியவில்லை. அதனால்தான் பத்திரிகையில் விளம்பரம் போட்டேன். “அது போட்டது இருக்கட்டும். ஏதோ 21ஆம் நூற்றாண்டில் எங்கள் அய்யன் என்று போட்டிருக்கிறீரே... உனக்கு அது மிகையாக தெரியவில்லையா” என்று கேட்டார். நான் சொன்னேன், எனக்கு எதுவும் மிகையாக தெரியவில்லை “அண்ணா. நான் என்ன வள்ளுவரையா பார்த்தேன்.?” இப்படித்தான் சொன்னேன். அவர் ஒரு தந்தைக்குரிய ஸ்தானத்தில் இருப்பவர். எப்போதுமே அவரை நான் அப்படி தான் பார்ப்பேன். கூடுமானவரை நாங்கள் அவரோடு சுற்றி இருக்கிறோமே தவிர, எங்களுடைய உணர்வெல்லாம் அப்படித்தான் இருக்கும். அப்படித்தான் எப்போதுமே அவருடைய பாசத்தைக் கொட்டுவார். எங்களுக்கு வள்ளுவரைத் தெரியாது. எங்களுக்கு தெரிந்த 21ஆம் நூற்றாண்டு அய்யன் நீங்கள்தான். இன்றைக்கு வள்ளுவர் என்றால் ஒருவர் இருக்கிறார் என்று நாட்டுக்கு தெரிகிறார் என்றால், பெரும் பங்கு உங்களுடைய பங்குதான். நீங்கள் வள்ளுவருக்காக என்ன குறை வைத்திருக்கிறீர்கள்?

சட்டசபையில் வள்ளுவர் படம் இருக்கிறது என்றால், அதற்கு காரணமாகவும் நீங்கள்தான் இருந்திருக்கிறீர்கள். போக்குவரத்துத் துறை அமைச்சராக இருக்கும்போது, பேருந்தில் வள்ளுவர் படம் வைக்க வேண்டும். குறளை எழுத வேண்டும் என்று சொன்னவரும் நீங்கள்தான். அதற்குப் பிறகு, குறளுக்கு குறளோவியம் தீட்டியவரும் நீங்கள்தான். அதையும் விட்டு வைக்கவில்லை. எனக்குத் தெரிந்து நூற்றுக்கு மேற்பட்டவர்கள் குறளுக்கு உரை எழுதி இருக்கிறார்கள். நீங்களும் எழுதினீர்கள். நான் பலவற்றை ஒப்பிட்டுப் பார்த்தேன். உங்களுடைய உரை என்பது பாமரர்களுக்கு புரியும்படி எளிமையான ஒரு உரை. எதையும் இழுத்து வைத்து திணிக்கும் பழக்கம் இல்லை. இதை எல்லாம் இல்லாமல் அடையாளப் படுத்த வேண்டும் என்பதற்காக, சென்னையில் நீங்கள் பெரிய கோட்டத்தை கண்டிருக்கிறீர்கள்.

**குறள் மீது பெரிய ஈடுபாடு உண்டு!**

அதோடு விட்டீர்களா, உலகமே வியக்கும் அளவிற்கு, இந்தியாவிற்கே அடையாளம் என்று சொல்லலாம். அய்யன் வள்ளுவருக்கு கன்னியாகுமரியில் சிலை எழுப்பி இருக்கிறீர்கள் என்று நான் அவரிடமே நேரடியாக பேசினேன். அந்த அய்யன் கண்ட 133 அடி கொண்ட வள்ளுவர் சிலை 25 வருடம் ஆகிவிட்டது. அந்த 25 வருடம் ஆகிவிட்டது என்றால், வள்ளுவர் மேல் எனக்கே ஒரு பாசம் உண்டு. எப்போது சட்டமன்றத்தை எடுத்து பார்த்தீர்கள் என்றாலும், நான் சட்டமன்றத்தில் பேசுகிறேன் என்றால், குறள் சொல்லாமல் நான் சட்டமன்றத்தில் பேசியிருக்க மாட்டேன். எதிர்க்கட்சியாக இருக்கும்போதும் குறள் சொல்லுவேன். ஆளுங்கட்சியாக இருக்கும்போதும் குறள் சொல்வேன். அமைச்சராக இருந்தாலும், குறள் சொல்வேன். எனக்கு குறள் மேல் ஒரு பெரிய ஈடுபாடு உண்டு.

நான் என்ன செய்தேன்? வள்ளுவரின் குறள். அந்தக் குறளின் கலைஞரின் உரை. அந்த உரை போன்று தான் வாழ்ந்தார். அந்த மூன்றையும் ஒப்பிட்டு, அதற்குரிய தரவுகளை கண்டுபிடித்து, கிட்டத்தட்ட 11 வருடமாக ஒரு புத்தகம் எழுதினேன். அந்த புத்தகத்திற்கு ‘கலைஞர் எனும் தாய்’ என்று புத்தகம் வெளியிட்டேன்.

ஆனால், நான் பொதுப் பணித் துறை அமைச்சராக இருக்கிறேன். எனக்கு அந்த நினைவில்லை. ஒரு நாள் முதலமைச்சர் திடீரென்று அழைத்து, அய்யன் திருவள்ளுவர் சிலையை தலைவர் வைத்து 25 ஆண்டுகள் ஆகிவிட்டது. இது வெள்ளி விழா ஆண்டு. இந்த விழாவை சிறப்பாக நாம் செய்ய வேண்டும். இதற்குப் பின்னால், விவேகானந்தர் பாறையும் வள்ளுவர் சிலை இருக்கும் இரண்டு பாறைகளும் இணைப்பதற்கு ஒரு பாலம் அமைக்கலாம் என்பது ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த ஒன்று. ஆனால், திட்டமிட்டார்களேயொழிய அந்தப் பாலம் அறிவிப்போடு நின்று விட்டது. பிறகு, ஆட்சி வந்தவுடன் இப்படி ஒன்று இருக்கிறதே என்று, அந்த கோப்பு எடுத்து வர சொல்லி பார்த்தால், அறிவித்தோடு அதை எப்படி கட்டுவது என்று ஒரு யோசனை இல்லாமலேயே அவர்கள் இருந்திருக்கிறார்கள்.

அதற்குப் பிறகு, ஏன் நாம் அதை கட்டினால் என்ன? என்று ஒரு முடிவு செய்து, அதற்குரிய ஆர்கிடெக்சர் எல்லாம் வர வைத்து, ஒரு முறைக்கு பல முறை டிஸ்கசன் சென்று, அதற்குப் பிறகு, ஐ.ஐ.டி. ஃப்ரொஃபசர் எல்லாம் வரச் சொல்லி, பிறகு அந்தத் திட்டமிடலை முதலமைச்சர் இடம் கொண்டு காண்பித்தோம்.

**வள்ளுவர் சிலை - வெள்ளி விழாவில் கண்ணாடி பாலம்!**

அப்போது முதலமைச்சர் என்ன சொன்னார் என்றால், நன்றாகத் தான் இருக்கிறது. நீங்கள் கடல் மேல் நடந்து செல்லப் போகிறீர்கள். ஏன், கடல் மேல் நடந்து செல்லும் போது, மையப் பகுதியில் நல்ல கடினமான உடையாத கண்ணாடிகளை போட்டீர்கள் என்றால், கீழே நடந்து போகும்போது அந்தப் பாலத்தில் அலை நன்றாகத் தெரியுமே என்று ஒரு யோசனை சொன்னார். அதைத் தான் இப்போது நீங்கள் கண்ணாடி பாலம்... கண்ணாடி பாலம் என்று சொல்கிறீர்கள். அதையும் அவர்தான் சொன்னார். அந்த பாலத்தையும் இப்போது கட்டும் பணிகளில் நாங்கள் இருக்கிறோம்.

இப்போது வெள்ளிவிழா ஆண்டை முன்னிட்டு, அந்தப் பாலம் திறந்தால் அந்தப் பாலத்திற்கு ஒரு சிறப்பு சேருமே. இடையில் இடையில் மழை. மழை மட்டும் என்று சொல்ல முடியாது. காற்றின் வேகமும் கடலில்தான் அதிகமாக இருக்கும். காற்றின் வேகம் அதிகமாக இருக்கும்போது அங்கு பணிகளை செய்யவே முடியாது. அவ்வப்போது தொய்வு ஏற்படும்.

இவ்வாறு வெள்ளி விழா ஆண்டில் நினைவகத்திற்கு வரும்போது, அந்தப் பாலத்தையும் திறந்து விட்டால் என்ன... அந்த எண்ணத்தில் தான் மறுநாளே அங்கு சென்று, எந்த அளவிற்குப் பாலம் இருக்கிறது என்று பார்த்து, அங்கிருப்பவர்களை கொஞ்சம் முடுக்கி விட்டு வந்திருக்கிறேன். இன்னும் இடைப்பட்ட நாட்களில் அந்தப் பணிகளை முடித்துவிட்டு, முதலமைச்சர் திருக் கரத்தால் திறந்து விடலாம் என்று ஒரு நம்பிக்கைதான்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா. நாகரத்தினம்

**சனவரி 1 (2024)**



**கழகம் துவக்கப்பட்ட போதே, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, காடையாம்பட்டி பகுதியில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர்.**

**ஓமலூர் வட்டச் செயலாளர், காடையாம்பட்டி ஒன்றிய பொறுப்பாளர் என கழகத்தில் பொறுப்பு வகித்தவர்.**

**பூசாரிப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர், காடையாம்பட்டி ஒன்றியக்குழு துணைத் தலைவர், காடையாம்பட்டி ஊரக வளர்ச்சி வங்கி தலைவர், தீவட்டிப்பட்டி வேளாண்மை பொறியியல் சேவை கூட்டுறவு சங்க தலைவர், சின்னதிருப்பதி கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர் என பல்வேறு பதவி வகித்தவர்.**

**மொழிப் போர் தியாகியான இவர், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டதோடு, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

வழக்கறிஞர் சூர்யாவெற்றிகொண்டான் பங்கேற்பு

## கடலூர் மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

அமைச்சர் சி.வெ.கணேசன், சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

கடலூர், ஜன.01-

கடலூர் மேற்கு கழக மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம் நெய்வேலி என்.எல்.சி தொ.மு.ச அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தொழிலாளர் நலம் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் தலைமை தாங்கி சிறப் புரையாற்றினார். கடலூர் மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் அருள்குமார், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் வழக்கறிஞர் பாரிஇப்ராகிம் முன்னிலை வகித்தனர். கழக சட்டத்துறை இணை செயலாளர் வழக்கறிஞர் சூர்யா வெற்றி கொண்டான், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

கூட்டத்தில் ஜனவரி மாதம் 18ஆம் தேதி நடைபெற உள்ள மாநில மாநாட்டில் திரளாக கலந்துகொள்ள வேண்டும், மேலும் சட்டமன்ற தேர்தலில் தி.மு.க வெற்றி பெறுவதற்கு வழக்கறிஞர்கள் சிறப்பாக பணியாற்ற வேண்டும் என பேசினர். இந்நிகழ்ச்சியில் வழக்கறிஞர் சங்க மாவட்ட துணைத் தலைவர் இராம்சிங், மாவட்ட துணை அமைப்பாளர்கள் பரணி சந்தர், ரவிச்சந்திரன், இளங்கோவன், வெற்றிச்செல்வன், அரசு வழக்கறிஞர்கள் சிலம்பரசன், அரிதாஸ், கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த பண்ருட்டி, நெய்வேலி, விருத்தாசலம், திட்டக்குடி ஆகிய பகுதியைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் தலைமைக் கழக வழக்கறிஞர் நாகை தினேஷ்குமார் நன்றி கூறினார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜெயமங்கலம் பி. அய்யாவு

**சனவரி 1 (1999)**



**தேனி மாவட்டம், பெரியகுளம் ஒன்றியப் தி.மு.க. பொறுப்பாளராக பணியாற்றியவர்.**

**ஜெயமங்கலம் ஊராட்சி மன்றத் தலைவராகவும் – தேனி கூட்டுறவு விற்பனை சங்க இயக்குநராகவும் – பெரியகுளம் கூட்டுறவு நிலவள வங்கி இயக்குநராகவும் பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் மற்றும் கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**